தினமணி
நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**கோழிகளை மேல் மூச்சுக் குழாய் நோய் தாக்கும் அபாயம்**

First Published : 16 Jul 2011 09:26:12 AM IST

நாமக்கல், ஜூலை 15: நாமக்கல் மாவட்ட பண்ணைகளில் வளர்க்கப்படும் கோழிகளை மேல் மூட்டு குழாய் நோய் தாக்கும் அபாயம் நிலவுகிறது என கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக வானிலை ஆலோசனை மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அம் மையம் வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிக்கை: அடுத்த நான்கு நாள்களுக்கு நாமக்கல் மாவட்ட வானிலையில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும்.

காற்றின் வேகம் கூடுதலடைந்து மாலை நேரத்தில் மழை பெய்யும். பகல் வெப்பம் 33 டிகிரி செல்சியஸ்ôகவும், இரவு வெப்பம் 23 டிகிரி செல்சியஸ்ôகவும் நிலவும். இது கோழிகளின் முட்டை உற்பத்திக்கு உகந்த தட்பவெப்பநிலையாகும். நடப்பாண்டு காற்றின் வேகம் குறைவாக இருப்பதால், தீவனம் விரயமும் குறைந்த இருக்கிறது.

கடந்த வாரம் கோழியின பரிசோதனை மற்றும் கண்காணிப்பு ஆய்வகத்தில் ஆய்வு செய்யப்பட்ட கோழிகள் பெரும்பாலும் மேல் மூச்சுக் குழல் நோய் மற்றும் தொற்று பர்சல் நோய்களால் இறந்திருப்பது தெரியவந்துள்ளது. எனவே பண்ணையாளர்கள் உரிய உயிர் பாதுகாப்பு முறைகளை கையாண்டு, கால்நடை மருத்துவர்களின் ஆலோசனைபேரில் ஐபிடி தடுப்பூசியை கோழிகளுக்கு போட வேண்டும்.

விவசாயிகளுக்கான ஆலோசனை: சுண்ணாம்பு சத்து அதிகமாக உள்ள நிலத்தில் சாகுபடி செய்யப்பட்ட நிலக்கடலை பயிரில் இரும்புச் சத்து பற்றாக்குறை பரவலாகக் காணப்படுகிறது. இளம் இலைகளில் வெளிர்தல் தோன்றி நிலக்கடலை தோட்டம் முழுவதும் வெள்ளை காகிதம் போல் காட்சி அளிக்கிறது.

இந்தப் பிரச்னையை நிவர்த்தி செய்ய ஒரு சதம் பெர்ரஸ் சல்பேட் கரைசலை (ஒரு லிட்டரில் 10 கிராம்) விதைத்த 30 - 40 நாள்களில் இலை மீது தெளிக்க வேண்டும்.

மரவள்ளியில் காணப்படும் மாவுப்பூச்சித் தாக்குதலைக் கட்டுப்படுத்த விவசாயிகள் முக்கால் அடி அகலம், ஒன்றரை அடி நீளம் கொண்ட வெள்ளை நிற பிளாஸ்டிக் டப்பாவில் மாவுப் பூச்சித் தாக்கிய இலைகளையிட்டு, வேளாண் அறிவியல் நிலையத்துக்கு கொண்டு வந்தால், அதில் மாவுப் பூச்சியைக் கட்டுப்படுத்தும் ஒட்டுண்ணி வளர்த்துத் தரப்படும்.

**முட்டை விலை**

First Published : 16 Jul 2011 09:26:59 AM IST

நாமக்கல், ஜூலை 15: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு வெள்ளிக்கிழமை அறிவித்த முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை முட்டை ஒன்றுக்கு நாமக்கல்லில் ரூ. 2.52, சென்னையில்
ரூ. 2.58.

கறிக்கோழி விலை

பல்லடம் பிராய்லர்ஸ் ஒருங்கிணைப்புக் குழு வெள்ளிக்கிழமை அறிவித்த கறிக்கோழியின் பண்ணைக் கொள்
முதல் விலை கிலோ ரூ.43, முட்டைக் கோழி கிலோ
ரூ. 38.

**அரசு நிறுவனங்கள் நெல் கொள்முதல் செய்ய வேண்டும்**

First Published : 15 Jul 2011 11:47:55 AM IST

புதுச்சேரி, ஜூலை 14: விவசாயிகளிடம் இருந்து அரசு நிறுவனங்கள் நெல் கொள்முதல் செய்ய வேண்டும் என்று புதுச்சேரி விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

÷இச்சங்கத்தின் தலைவர் எம். மாசிலாமணி, பொதுச் செயலர் து. கீதநாதன் ஆகியோர் வேளாண்துறை அமைச்சர் சந்திரகாசுவைச் சந்தித்து மனு அளித்தனர்.

÷அதில் கூறியிருப்பது: புதுச்சேரி பகுதியின் வேளாண் வளர்ச்சி குறித்து விவாதித்து செயல்படுத்த கடந்த காலத்தில் வேளாண் உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டிருந்தது.

÷இந்தக் குழுவில் காரைக்கால், மாஹே, யேனம் ஆகிய பகுதியைச் சேர்ந்த பிரதிநிதிகளும் அங்கம் பெற்றிருந்தனர்.

÷இப்போது புதுச்சேரிக்குத் தனியாகவும், காரைக்காலுக்குத் தனியாகவும், மாஹே, யேனம் ஆகியப் பகுதிகளுக்கு என்று தனியாகவும் உயர்நிலைக் குழு அமைத்தால் சிறப்பாகச் செயல்பட முடியும்.

÷கூட்டுப்பட்டா, கோயில் புறம்போக்கு, குத்தகை நிலங்களில் பயிரிடுவோர் அனைவருக்கும் வேளாண் அலுவலர் விசாரணை அடிப்படையில் வேளாண் அடையாள அட்டை வழங்க வேண்டும்.

÷60 வயது அடைந்த விவசாயிகள் அனைவருக்கும் ஆண், பெண் வித்தியாசமின்றி பென்ஷன் ரூ.2 ஆயிரம் வழங்க வேண்டும்.

÷அனைத்துப் பயிர்களுக்கும் பயிர் காப்பீடு திட்டத்தை அமல் செய்ய வேண்டும். நெல்லுக்குப் பதிலாக மாற்றுப் பயிர் சாகுபடி செய்தால் ஏக்கர் ஒன்றுக்கு ரூ.2 ஆயிரம் ஊக்கத்தொகை வழங்கும் திட்டம் அமல்படுத்தப்பட்டது.

÷இத்திட்டத்தின் நோக்கமே மின்சாரம் மற்றும் தண்ணீர் அதிகம் செலவழிப்பதைச் சேமிக்க வேண்டும் என்பதற்காகதான்.

÷இத்திட்டத்தை விரும்பி ஏற்று மாற்றுப் பயிராக மணிலா, உளுந்து, காராமணி, சூரியகாந்தி போன்ற பயிர்கள் சாகுபடி செய்தவர்களுக்கு ஊக்கத் தொகை கொடுக்கப்படாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

÷கிடப்பில் உள்ள ஊக்கத்தொகையை வழங்க வேண்டும். விவசாயிகள் சாகுபடி செய்ய விதையிட்ட 2 மாதங்களுக்கு உள்ளாகவே ஊக்கத் தொகையை வழங்க வேண்டும்.

÷மண் தன்மை கெட்டுப் போவதையொட்டியும் உரம், இடு பொருள்கள் விலையேற்றத்தைக் கொண்டும் இயற்கை விவசாயத்தை விவசாயிகள் விரும்பி செயல்படுத்துவதற்கான வழிமுறைகளை வேளாண்துறை செயல்படுத்த வேண்டும்.

÷பஞ்சகாவ்ய முறை மற்றும் மண்புழு உரம் தயாரிப்பு ஆகியவற்றை செயல்படுத்த வேண்டும்.

÷கடப்பாரை, மண்வெட்டி, ஏர் கலப்பை, களைக் கொத்தி போன்றவை ஐந்தாண்டுகளுக்கு முன்பு மானிய விலையில் விவசாயிகளுக்கு தரப்பட்டது. மீண்டும் இதைத் தர வேண்டும். ÷மாட்டுத் தீவனம், கன்று தீவனம் வழங்க வேண்டும். கூட்டுறவு மாட்டுப் பண்ணை அமைக்க வேண்டும். கூட்டுறவு பால் பண்ணை அமைக்க வேண்டும்.

÷கரும்புக்கான விலை நிர்ணயம் செய்ய விவசாயிகள் அடங்கிய முத்தரப்புக் குழுவை ஏற்படுத்தி அக் கூட்டத்தில் முடிவு செய்ய வேண்டும்.

தினமலர்

**சென்ற மே மாதத்தில் தென்னிந்திய தேயிலை ஏற்றுமதி 14 சதவீதம் சரிவு**

ஜூலை 16,2011,00:05



புதுடில்லி: தென்னிந்தியாவின் தேயிலை ஏற்றுமதி, சென்ற மே மாதத்தில், 14 சதவீதம் சரிவடைந்து, 64.30 லட்சம் கிலோவாக உள்ளது. இது, கடந்த ஆண்டின், இதே மாதத்தில், 74.70 லட்சம்

கிலோவாக அதிகரித்து காணப்பட்டது என தேயிலை வாரியம் தெரிவித்துள்ளது.கிழக்கு ஆப்ரிக்காவைச் சேர்ந்த கென்யா உள்ளிட்ட நாடுகள், எகிப்து நாட்டிற்கு தேயிலையை அதிகளவில் ஏற்றுமதி செய்து வருகின்றன. இந்நிலையில், எகிப்து நாட்டில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியால், தேயிலை ஏற்றுமதி வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக, கிழக்கு ஆப்ரிக்க நாடுகள் மற்ற நாடுகளுக்கு தேயிலை ஏற்றுமதியை அதிகரித்துள்ளன. இது, தென்னிந்தியாவில் இருந்து ஏற்றுமதியாகும் தேயிலைக்கு கடும்போட்டியை ஏற்படுத்தியுள்ளது என, தென்னிந்திய பெருந்தோட்டப் பயிர் சாகுபடியாளர்கள் சங்கத்தின் தலைவர் ஆர்.சஞ்சித் தெரிவித்தார்.சென்ற மே மாதத்தில், தென்னிந்தியாவின் தேயிலை உற்பத்தி 3 சதவீதம் குறைந்து, 2.44 கோடி கிலோவாக உள்ளது. இந்த உற்பத்தி, கடந்த 2010ம் ஆண்டு இதே மாதத்தில், 2.52 கோடி கிலோவாக அதிகரித்து காணப்பட்டது என தேயிலை வாரியம் தெரிவித்துள்ளது.

**பாசுமதி அரிசி விலை உயர்வு**

ஜூலை 16,2011,15:05



புதுடில்லி: மொத்த மார்கெட்டில் விற்பனை அதிகரித்துள்ளதையடுத்து பாசுமதி மற்றும் பாசுமதி அல்லாத அரிசிகளின் விலைகள் உயர்ந்துள்ளது. இதுகுறித்து வர்த்தகர்கள் கூறுகையில், ஸ்டாக்கிஸ்டுகள் மற்றும் விற்பனையாளர்களின் ஆதரவு காரணமாக அரிசிகளின் விலை உயர்ந்துள்ளதாக தெரிவித்தனர். டில்லியில் பாசுமதி அரிசி குவிண்டால் ஒனறிற்கு ரூ. 100 உயர்ந்து ரூ. 5400 முதல் 5500 வரை உள்ளது. புசா 1112 வகை அரிசி ரூ. 4300 முதல் 5100 வரை விற்கப்படுகிறது. பாசுமதி அல்லாத அரிசி ரகங்கள் ரூ. 25 விலை உயர்ந்துள்ளன.

**மாவுப்பூச்சிகளை கட்டுப்படுத்த புதிய ஒட்டுண்ணி தோட்டக்கலைத்துறை மூலம் இலவச விநியோகம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 16,2011,00:30 IST

ஈரோடு: ஈரோடு மாவட்டம் சென்னிமலை யூனியன் பகுதியில் மரவள்ளி, பப்பாளி, கொய்யா, கத்தரி, கோகோ, பழப்பயிர்கள், மலர்செடிகள், தேக்கு போன்ற பல்வேறு தோட்டக்கலை

பயிர்களை பப்பாளி மாவுப்பூச்சி பெருமளவு தாக்கி சேதப்படுத்துகிறது.வெப்பம் அதிகரிக்கும்போது, மாவுப்பூச்சியால் சேதமும் அதிகரிக்கும். பல்வேறு பூச்சிக்கொல்லி மருந்துகள் தெளித்தும், மாவுப்பூச்சியை முழுமையாக கட்டுப்படுத்த முடியாது. பப்பாளி மாவுப்பூச்சி குறுகிய வளர்ச்சி காலமும், பூச்சியின் அதிக இனப்பெருக்கத்திறனும், இப்பூச்சிகளின் மேல் பாதுகாப்பு கவசம் போல இருக்கும் வெண்மைநிற மாவு போன்ற பொருளும் இதற்கு காரணம்.இம்மாவுப்பூச்சியை உயிரியல் முறையில் நிரந்தரமாக கட்டுப்படுத்த அமெரிக்கா நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஒட்டுண்ணி, "அசிரோபேகஸ் பப்பாயே' தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் பவானிசாகர் ஆராய்ச்சி நிலையத்தில் உற்பத்தி செய்து, விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது.சென்னிமலை வட்டாரத்தில் கடந்த பத்தாம் தேதி நான்கு விவசாயிகளின் மரவள்ளிப்பயிரில் ஒட்டுண்ணி வெளியிடப்பட்டது.இந்த ஒட்டுண்ணிகள் மாவுப்பூச்சி சேதமுள்ள வயல்வெளியில் வெளியிட்டவுடன், மாவுப்பூச்சிகளை சுறுசுறுப்பாக தேடிச்சென்று முட்டையிடும். ஒரு பெண் ஒட்டுண்ணி 50 முதல் 60 முட்டைகளை இடும். இந்த முட்டைகளில் இருந்து வெளிவரும் ஒட்டுண்ணிகள் உடன் பப்பாளி மாவுப்பூச்சியை தாக்க துவங்கும். ஒட்டுண்ணிகளின் வாழ்நாள் 16 முதல் 22 நாட்களில் முடிந்துவிடும். வளர்ந்த ஒட்டுண்ணிகளின் ஆயுள் ஐந்து முதல் ஆறு நாட்களாகும்.மாவுப்பூச்சிகளின் சேதத்தை பொறுத்து, பாதிக்கப்பட்ட வயலில் 100 ஒட்டுண்ணிகள் விடப்படுகின்றன. குறுகிய கால இனப்பெருக்கம் ஏற்படுவதால், ஒரு வயலுக்கு ஒரு முறைவிட்டால் போதுமானதாகும். ஒட்டுண்ணிகள் தானாக பெருகி பெருமளவில் மாவுப்பூச்சிகளை அழித்துவிடும். ஒட்டுண்ணிகளால் பாதிக்கப்பட்ட மாவுப்பூச்சிகள் கருமை நிறமாக மாறி இறந்து இருப்பதை பார்க்க முடியும்.ஒட்டுண்ணி விடப்பட்ட 15 நாட்களில் ஒரு இலையில் ஆறு முதல் 32 ஒட்டுண்ணி வரை ஓடிக் கொண்டிருப்பதை பார்க்க முடியும். இவை மற்ற நன்மை செய்யும் பூச்சிகளுக்கு கெடுதல் செய்வதில்லை. ஒட்டுண்ணிகள் விட்ட வயல்வெளியில் பூச்சிக்கொல்லி, களைக்கொல்லி மருந்துகள் தெளிக்கக்கூடாது, என சென்னிமலை வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் சுப்பிரமணியன் தெரிவித்தார்.

**திராட்சை விவசாயிகளுக்கு தோட்டக்கலை மானியம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 16,2011,23:21 IST

சின்னமனூர் : சின்னமனூர் வட்டாரத்தில் தொடர்ந்து சாரல் மழை பெய்து வருகிறது. நிலம் ஈரப்பதத்துடன் இருப்பதால் திராட்சை நடுவதற்கு ஏற்ற பக்குவத்தில் உள்ளது. இந்த வாய்ப்பை பயன்படுத்தி நிரந்தர பயன்கொடுக்கக்கூடிய திராட்சை நடவு செய்து பயனடைய தோட்டக்கலைதுறை விவசாயிகளை கேட்டுக் கொண்டுள்ளது. தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின் மூலம் புதிதாக திராட்சை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானிய உதவி தொகை மதிப்பாக வழங்குகிறது. முதல் ஆண்டில் 30 ஆயிரமும், இரண்டாம், மூன்றாம்

ஆண்டுகளில் 10 ஆயிரமும் வழங்கப்படுகிறது. விவசாயிகள் தாங்கள் புதிதாக நடவு செய்துள்ள இளம் கொடியுடன் பந்தல் அமைக்கப்பட்டுள்ள நிலத்தின் புகைப்படம், சிட்டா அடங்கல், ரேஷன் கார்டு நகல் மற்றும் பாஸ்போர்ட் அளவு போட்டோவுடன் தங்கள் பகுதி தோட்டக்கலை துறை அலுவலகத்தையோ அல்லது தங்கள் பகுதி உதவி தோட்டக்கலை அலுவலரையோ தொடர்பு கொண்டு பயன்பெறலாம். வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் சுரேஷ் ஸ்ரீராம் தெரிவித்துள்ளார்.

**தென்னை ஊடுபயிர் சாகுபடியாளர்கள் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : ஜூலை 16,2011,00:55 IST

பொள்ளாச்சி : "தேங்காய் விலை சரிவை தடுக்க தேங்காய் எண்ணெயில் கலப்படம் செய்பவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று தென்னை ஊடுபயிர் சாகுபடியாளர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. தமிழக தென்னை ஊடுபயிர் சாகுபடியாளர்கள் சங்க தலைவர் முத்துராமலிங்கம் முதல்வருக்கு அனுப்பியுள்ள மனு: பொள்ளாச்சி தாலுகாவில் ஒரு லட்சம் ஹெக்டருக்கு மேல் தென்னை சாகுபடி பரப்பு உள்ளது. தேங்காய் விலை கொப்பரை மார்க்கெட்டை பொறுத்து நிர்ணயம் செய்யப்படுகிறது. இந்தியாவுக்கு பாமாயில், பார்ம்கர்னல் எண்ணெய் இறக்குமதி செய்யப்படுகிறது. அதில், பார்ம்கர்னல் எண்ணெயை தேங்காய் எண்ணெயுடன் கலப்படம் செய்கின்றனர். இதனால் தேங்காய் மார்க்கெட் சீர்குலைந்து பாதிப்படைகிறது. தேங்காய் எண்ணெயில் கலப்படம் செய்வதை தடுக்க வேண்டும். கேரளாவில் விற்பனை உரிமம் பதிவு செய்தவர்களுக்கு விற்பனை வரி செலுத்த தேவையில்லை என்றுள்ளதால், தமிழகத்தில் கொப்பரை கொள்முதல் செய்து குறைந்த விலைக்கு விற்கின்றனர். இதனாலும் விலை வீழ்ச்சி ஏற்படுகிறது.

இதனால் ஒரு தேங்காய்க்கு இரண்டு முதல் மூன்று ரூபாயும், கொப்பரை கிலோவுக்கு 20 ரூபாயும் இழப்பு ஏற்படுகிறது. தேங்காய் விலை சரிவை தடுக்க தேங்காய் எண்ணெயில் கலப்படம் செய்பவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு, மனுவில் தெரிவித்துள்ளார்.

**வெற்றிலையில் செம்படை நோய் தாக்குதல் : விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : ஜூலை 16,2011,00:23 IST

ப.வேலூர்: வெற்றிலையில் செம்படை நோய் தாக்குதல் காரணமாக, விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது. அதனால், பயிரிட்ட விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். ப.வேலூர் பகுதிக்கு உட்பட்ட ஜேடர்பாளையம், பொத்தனூர், பிலிக்கல்பாளையம், பாண்டமங்கலம், பொய்யேரி,

ப.வேலூர், நன்செய் இடையாறு, பாலப்பட்டி, மணப்பள்ளி, மோகனூர் உள்ளிட்ட காவிரிக்கரையோக பகுதிகளில், 3,000 ஏக்கர் பரப்பில் வெற்றிலை பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இங்கு விளைவிக்கப்படும் வெற்றிலைகள், அறுவடை செய்து வேலூரில் உள்ள தனியார் கமிஷன் மண்டிக்கு கொண்டு வந்து ஏலம் விடப்படுகிறது. அதற்காக சேலம், கோவை, திண்டுக்கல், மதுரை, நீலகிரி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் வந்து ஏலம் எடுத்து, தமிழகம் மட்டும் அல்லாமல் ஆந்திரா, கர்நாடகா, குஜராத், மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கின்றனர்.

தற்போது, வெற்றிலையில் செம்படை நோய் தாக்குதல் அதிகம் உள்ளது. அதனால், வெற்றிலைகள் சுருண்டு பயிர்கள் வாடி கருகி வருகிறது. செம்படை நோய் தாக்குதலால், வெற்றிலை உற்பத்தி குறைந்துள்ளது. அதன் காரணமாக, கமிஷன் மண்டிக்கு வெற்றிலை வரத்தும் குறைந்துள்ளது. நோய் தாக்குதல் காரணமாக, வியாபாரிகள் வந்து வெற்றிலையை ஏலம் எடுக்கவும் ஆர்வம் காட்டவில்லை. அதனால், பயிரிட்ட விவசாயிகள் மிகுந்த கவலை அடைந்துள்ளனர். கடந்த வாரத்தில், 104 கவுளி கொண்ட வெள்ளை வெற்றிலை இளங்கால் பயிர் ஒரு சுமை, 5,000 ரூபாய்க்கு ஏலம் போனது. இந்த வாரம், 3,500 ரூபாய்க்கு விற்பனையானது.கடந்த வாரம், 3,500 ரூபாய்க்கு விற்பனையான முதிர்கால் பயிர், இந்த வாரம், 2,000 ரூபாய்க்கு விற்பனையானது. அதேபோல், கற்பூர வெற்றிலை கடந்த வாரம் ஒரு சுமை, 3,500 ரூபாய்க்கு விற்பனையாது. இந்த வாரம், 2,000 ரூபாய்க்கு ஏலம் போனது. கற்பூர வெற்றிலை முதிய பயிர் கடந்த வாரம், 1,500 ரூபாய்க்கு விற்றது. இந்த வாரம், 600 ரூபாய்க்கு விற்பனையானது. இந்த விலை சரிவால், பயிரிட்ட விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். நோய் தாக்குதலால் விலை சரிவு ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

**கம்பு விளைச்சல் அமோகம்: கி.கிரி விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : ஜூலை 15,2011,23:22 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், சித்திரை பட்டத்தில் விதைத்த கம்பு பயிர்கள் நல்ல மகசூல் கொடுத்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 86,450 ஹெக்டேர் நிலப்பரப்பில் சிறுதானிய பயிர்களான, கம்பு, ராகி, சோளம், ஆகிய பயிர்கள் பயிரிடப்பட்டு வருகிறது. காவேரிப்பட்டணம், கிருஷ்ணகிரி, தேன்கனிக்கோட்டை, ஊத்தங்கரை ஆகிய பகுதிகளில் நிலக்கடலை உள்ளிட்ட எண்ணெய்வித்து பயிர்கள், 33,780 ஹெக்டேர் நிலப்பரப்பில் பயிரிடப்படுகிறது. கிருஷ்ணகிரி, பர்கூர், வேப்பனப்பள்ளி ஆகிய யூனியன்களில் வானம் பார்த்த நிலங்களில் சித்திரை பட்டத்தில் கம்பு, சோளம் பயிரிடப்படுகிறது. குறிப்பாக

கிருஷ்ணகிரி யூனியனில் உள்ள பூசாரிப்பட்டி, கரடிகுறி, கம்மம்பள்ளி, வென்னம்பள்ளி, சின்னேப்பள்ளி, வரட்டனப்பள்ளி, சின்ன மட்டராப்பள்ளி, எலுமிச்சங்கிரி, போச்சம்பள்ளி, புளியாண்டபட்டி, வாழைதோட்டம், கொடமாண்டபட்டி உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட கிராமங்களில் கம்பு அதிக அளவில் பயிரிடப்படுகிறது.

பொதுவாக கிராம புறங்களில், கம்பு முக்கிய உணவு பொருளாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், கால்நடைகளுக்கு கம்பு தட்டுகள் முக்கிய தீவனமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. பிஸ்கெட்டுகள் மற்றும் சத்து உணவு பொருட்கள் தயாரிக்கும் பல கம்பெனிகள் கம்பை வாங்கி செல்கின்றன. இதனால், கம்புக்கு எப்போதும் நல்ல வரவேற்பு ஏற்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில், மே மாத கடைசி வாரத்தில் இருந்து பருவ மழை துவங்கியது. மாவட்டத்தில் பல பகுதிகளில் பரவலாக நல்ல மழை பெய்தது. மேலும் கர்நாடகா மற்றும் ஓசூர் பகுதிகளில் பெய்த பரவலான மழையால் கிருஷ்ணகிரி கே.ஆர்.பி.,அணைக்கு நீர் வரத்து அதிகரித்து ஆடி பட்ட நெல் விதைப்புக்காக, ஜூன் 19ம் தேதி தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

மாவட்டத்தில், கடந்த மூன்று ஆண்டுகளாக சித்திரை மாதத்தில் பரவலாக மழை பெய்து வருவதால், விவசாயிகள் அதிக பரப்பில் கம்பு பயிரிட்டு வருகின்றனர். இந்த ஆண்டும் மாவட்டத்தில், அதிக பரப்பில் கம்பு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி மற்றும் பர்கூர் யூனியன் பகுதியில் மட்டும், 500க்கும் மேற்பட்ட ஏக்கரில் கம்பு பயிரிட்டப்பட்டு வருகிறது. தற்போது கம்பு அறுவடை பணி துவங்கிய நிலையில், நல்ல விளைச்சல் உள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கிருஷ்ணகிரியை அடுத்த வரட்டனப்பள்ளியை சார்ந்த கம்பு பயிரிட்டுள்ள விவசாயி கமலநாதன் (40) கூறியதாவது:
இந்த ஆண்டு பருவமழை முன் கூட்டியே துவங்கி, நல்ல படியாக பெய்ததால் இரண்டு ஏக்கரில் கம்பு பயிரிட்டுள்ளேன். சித்திரை பட்டத்தில் விதைத்த கம்புக்கு தொடர்ந்து மழை பெய்து வந்ததால், நல்ல முறையில் வளர்ந்துள்ளது. ஒரு சில இடங்களில் கம்பு அறுவடை துவங்கியுள்ளது. ஏக்கருக்கு 10 மூட்டை கம்பு கிடைக்கும் என்று எதிர்பார்த்துள்ளோம். இதை வெளி மாவட்ட வியாபாரிகள் போட்டி போட்டு கொண்டு வாங்க வருவதால், இந்த ஆண்டு நல்ல லாபம் கிடைக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

**இயற்கை உரம் தயாரிக்கும் மகளிர் முன்மாதிரி :காபி எஸ்டேட்களுக்கு வரப்பிரசாதம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 15,2011,22:15 IST

கன்னிவாடி : கன்னிவாடியில் சேகரிக்கப்படும் குப்பை, மகளிர் சுய உதவிக்குழுவினரால் இயற்கை உரமாக மாற்றப்பட்டு, காபி எஸ்டேட்களுக்கு விற்கப்படுகிறது. இத்திட்டம் தமிழக அளவில் முன்மாதிரியாக செயல்படுகிறது.
இங்கு "கனிவை மகளிர் சுய உதவிக்குழு' உள்ளது. இதில், 20 பேர் உறுப்பினர்கள். இவர்கள், தெருக்களில் குப்பையை சேகரிக்கும்போதே மக்கும், மக்காதவை என, தரம் பிரிக்கின்றனர். பாலிதீன், பிளாஸ்டிக் போன்ற மக்காத குப்பைகளை கழுவி சுத்தம் செய்து மறு சுழற்சிக்காக விலைக்கு விற்கின்றனர். மக்கும் குப்பைகளை, பேரூராட்சியில் நிறுவப்பட்டுள்ள இயற்கை உரக்கிடங்கில் "உரத்தாக்கு' முறையில் குவித்து (குவியல் ஒன்று 250 கிலோ எடை) வைத்து 45 முதல் 60 நாட்கள் வரை பதப்படுத்துகின்றனர்.

காபி எஸ்டேட்: இங்கு தயாரிக்கப்படும் இயற்கை உரம், கிலோ இரண்டு ரூபாய்க்கு விற்கப்படுகிறது. கொடைக்கானல் பகுதியில் விளையும் காபி, ஆரஞ்சு, சவ்சவ், அன்னாசி, பிளம்ஸ், பேரிக்காய் பயிர்களுக்கு அதிகளவு இயற்கை உரத்தை வாங்கி செல்கின்றனர். கரும்பு, பருத்தி, பயறு பயிரிட்டுள்ள விவசாயிகளும் இயற்கை உரத்தை பயன்படுத்துகின்றனர். தமிழக அளவில் மகளிர் சுய உதவிக்குழுவினரால் தயாரிக்கப்படும் இயற்கை உரம் முன்மாதிரி திட்டமாக கருதப்படுகிறது.

விரிவுபடுத்தப்படுமா?: மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர் பழனியம்மாள் கூறும்போது,""நான்கு ஆண்டுக்கு முன் இயற்கை உர உற்பத்தி துவக்கப்பட்டது. அப்போது 25 ரூபாய் சம்பளத்திற்கு சேர்ந்தோம். ஐந்து மணி நேரம் மட்டும் வேலை இருக்கும். தற்போது 60 ரூபாய் சம்பளம் வழங்கப்படுகிறது. ஏராளமாக ஆர்டர் வருகிறது.
இத்திட்டம் விரிவுபடுத்தும்பட்சத்தில் பெண்களுக்கு வேலை வாய்ப்பும், இயற்கை உர விற்பனை மூலம் பேரூராட்சிக்கு அதிக வருவாய் கிடைக்க வாய்ப்புள்ளது. பயிர் பாதுகாப்புக்கு இயற்கை உரம் சிறப்பானது,'' என்றார்.

**கரும்பில் செம்மை சாகுபடி முறை அறிமுகம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 15,2011,22:15 IST

வடமதுரை : நெல் பயிரில் மட்டுமே இருந்த செம்மை சாகுபடி முறை, கரும்புக்கும் கொண்டு வரப்பட்டுள்ளதாக, வடமதுரை வேளாண் உதவி இயக்குனர் பாஸ்கரன் தெரிவித்தார். அவர்

கூறியதாவது: வடமதுரை வட்டாரத்தில் ஆண்டுதோறும் 150 எக்டேரில் கரும்பு சாகுபடி நடக்கிறது. வழக்கமான சாகுபடி முறையில் ஹெக்டேருக்கு 90 டன் மகசூல் எடுப்பதே சிரமமாக உள்ளது. செம்மை கரும்பு சாகுபடி முறையில் 150 டன் மகசூல் எடுக்கலாம். ஒரு விதைப்பரு சீவல்களிலிருந்து 50 கிலோ எடையில் 5000 ஒரு விதைப்பரு சீவல்கள் கொண்டு முளைக்க வைக்கவும்.
கோகோ பீட் குழித்தட்டுகளில் நட்டு நாற்றுவிட்டு வளர்த்து 25-35 நாட்களில் வரிசைக்கு வரிசை 5 அடி, செடிக்கு செடி 2 அடி இடைவெளியில் நடவு செய்யவும். குறைந்த அளவு நீர் பயன்படுத்தி சாகுடி செய்ய வேண்டும். இம்முறை மூலம் பாசன நீர் தேவை குறைவதுடன் பாசன காலமும், இடைவெளியும் குறைகிறது. உர உபயோகத்திறன் 60 சதவீதம் கூடுகிறது. இதனால் அதிக லாபம் பெறலாம், என்றார்.

**நெல்விதை கிராம திட்ட விவசாயிகள் பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஜூலை 15,2011,23:32 IST

ஆழ்வார்குறிச்சி : கோவிந்தபேரி கிராமத்தில் நெல்விதை கிராம திட்ட விவசாயிகள் பயிற்சி நடந்தது.கடையம் வட்டாரத்தில் விதை கிராம திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு தேவையான விதைகளை விவசாயிகளே உற்பத்தி செய்யும் தொழில் நுட்பத்தை விவசாயிகளுக்கு கற்றுக் கொடுக்க நெல் விதை கிராம திட்ட விவசாயிகள் பயிற்சி கோவிந்தபேரி கிராமத்தில் நடந்தது.பயிற்சியில் கடையம் வேளாண்மை அலுவலர் மாரியப்பன் வரவேற்புரை வழங்கினார். விதை கிராம திட்டத்தின் பயன்களையும், நெல் பயிர் பாதுகாப்பு தொழில் நுட்பத்தையும், நெல் குருத்துப்பூச்சியை கட்டுப்படுத்தும் இனக்கவர்ச்சி பொறியை பயன்படுத்தும் முறையையும் கடையம் வேளாண்மை உதவி இயக்குநர் ராஜசேகர் வழங்கினார்.பயிற்சியை கடையம் பஞ்.,யூனியன் குழு தலைவி செல்வி சங்குகிருஷ்ணன் துவக்கி வைத்து பேசினார். வேளாண்மை துணை இயக்குநர் குமாரசாமி தலைமை வகித்து பேசினார். கோவிந்தபேரி பஞ்.,தலைவர் சரோஜாதுரை, மந்தியூர் யூனியன் குழு உறுப்பினர் முருகன் சிறப்புரையாற்றினர். ஆலங்குளம் விதைச்சான்று அலுவலர் சிவகுருநாதன் விதை கிராம திட்ட பயிற்சியை வழங்கினார். வேளாண்மை அலுவலர் மாரியப்பன் நன்றி கூறினார். ஏற்பாடுகளை கடையம் உதவி வேளாண்மை அலுவலர் திரவியம் மற்றும் ஜெகதீஸ்வரன் செய்திருந்தனர்.இந்த முதல் கட்ட பயிற்சியில் கோவிந்தபேரி பகுதியை சார்ந்த 100 விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

**சிறுகுறு விவசாயிகள் பண்ணை வாரியான செயல்திட்டம் தயாரிப்பு பணி துவக்கம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 15,2011,23:31 IST

ஆழ்வார்குறிச்சி : "வேளாண்மைத்துறையில் சிறுகுறு விவசாயிகள் பண்ணை வாரியான செயல்திட்டம் தயாரிக்கும் பணிகள் துவங்கப்பட்டுள்ளது' என கடையம் வேளாண்மை உதவி இயக்குநர் ராஜசேகர் தெரிவித்தார்."வேளாண்மைத்துறையில் வேளாண் உணவு பொருட்கள் உற்பத்தியை இருமடங்காக அதிகரிக்கவும், சிறு குறு விவசாயிகளின் விவசாய வருமானத்தை அதிகரித்திடவும், விவசாயிகளிடம் தரிசாக உள்ள நிலங்களை விளை நிலங்களாக மாற்றிடவும், நீடித்த நிலையான வேளாண் உற்பத்தியை அடைந்திடவும் விவசாயிகள் வாரியாக செயல்திட்டம் தயாரித்து அனுப்ப தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் விவசாயிகள் வாரியாக செயல்திட்டம் தயாரிக்கும் பணியில் உதவி வேளாண்மை அலுவலர்கள் ஈடுபட்டுள்ளனர்.விவசாயிகள் வாரியாக செயல்திட்டம் தயாரிப்பதற்கு விவசாயிகளின் பெயர், வயது, பாலினம், தொலைபேசி, பாங்க் கணக்கு எண், கல்வி அறிவு, நில விபரம் அல்லது குத்தகைதாரர்களின் வயல் இருக்குமிடம் சர்வே எண் பரப்பு ஆகிய நிலங்கள் குறித்து விபரங்கள், பயிர் பருவங்கள், விவசாயிகளிடம் இருக்கும் பண்ணை கருவிகள், தேவைப்படும் பண்ணை கருவிகளின் விபரங்கள் செயல்திட்டத்தில் இடம்பெற்றுள்ளது.இதுமட்டுமின்றி விவசாயி தற்போது கடைபிடித்து வரும் பயிர் சாகுபடி முறைகள், அவரது பண்ணை வருமானம் குறித்தும் அனைத்து விவசாயிகளும் தமது அடிப்படை புள்ளி விபரங்களை எடுத்து வைத்து கொண்டு தங்களது பகுதிக்கு வரும் உதவி வேளாண்மை அலுவலரை நேரில் சந்தித்து அவர்கள் கேட்கும் புள்ளி விபரங்கள் காலம் தாழ்த்தாமல் கொடுத்து இச்செயல் திட்டம் தயாரிக்க உதவிட வேண்டும்' என கடையம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ராஜசேகர் தெரிவித்துள்ளார்.

**விவசாய பயிர்களுக்கு காப்பீடுசெய்வதற்கு இன்று கடைசி நாள்**

பதிவு செய்த நாள் : ஜூலை 15,2011,02:20 IST

திருநெல்வேலி:விவசாயிகள் தங்கள் பயிர்களுக்கான காப்பீடு செய்வதற்கு இன்று(15ம் தேதி)கடைசி நாளாகும்.இதுகுறித்து சேரன்மகாதேவி வேளாண்மை உதவி இயக்குனர் ஜெயசெல்வின் இன்பராஜ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:சேரன்மகாதேவி வட்டாரத்தில் தற்போது நெல் நடவு செய்யும்பணிகள் நடைபெற்று வருகிறது.

இந்த தருணத்தில் நடவு செய்துள்ள பயிரை வறட்சி மற்றும் வெள்ளச் சேதங்களில் இருந்து காக்க தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தின் கீழ் காப்பீடு செய்வதன் மூலம் உரிய இழப்பீடு

பெற்றுக்கொள்ளலாம்.ஒரு ஏக்கருக்கு 153 ரூபாய் செலுத்தி காப்பீடு செய்து ரூ.13 ஆயிரம் வரை இழப்பீட்டு தொகை பெற்றுக்கொள்ளலாம். இன்று(15ம் தேதி) காப்பீட்டு பிரீமியம் தொகை செலுத்த கடைசி நாள். தங்கள் பகுதியில் உள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கம் அல்லது அரசு துறை பாங்க்குகளின் மூலம் காப்பீடு செய்ய கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும் விபரங்களுக்கு சேரன்மகாதேவி வேளாண்மை விரிவாக்க மையம் மற்றும் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களை அணுகலாம்.இவ்வாறு ஜெயசெல்வின் இன்பராஜ் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.